27.12.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.15 மணியளவில் நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை. திரு.சே.முத்துத்துரை.பி.காம்.அவர்கள்**

## பொருட்கள்

<table>
<tr>
<td>1</td>
<td>காரைக்குடி மாநகராட்சி பகுதியில் சிக்கன் குனியா, டெங்கு மற்றும் மலேரியா போன்ற கொசுக்களின் மூலம் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்தவும் கொசு உற்பத்தியை தடுக்கவும் வீடுதோறும் டெங்கு தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளவும் 80 DBC (Domestic Breeding Checker) பணியாளர்களை திரு.D.செந்தில்குமார் ஒப்பந்தகாரர் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பெற்று பணியாற்றி வருகின்றனர். மேற்காணும் ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு 15.09.2024–ல் முடிவடைவதால் நோய்த்தடுப்பு நடவடிக்கையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் ஒப்பந்தத்தை 16.09.2024 முதல் நான்கு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத் தொகை ரூ.43.82 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.4003/2023/H1</td>
<td>தீர்மான எண். 92<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>2</td>
<td>காரைக்குடி மாநகராட்சி மாமன்ற கூட்ட அறிமுக விழா 09.10.2024 அன்று நடைபெற உள்ளதால் மேற்படி விழாவிற்கு விழா மேடை பந்தல் சாமியானா பந்தல், மேயர் அறை டெக்ரேசன், மாமன்ற கூட்ட டெக்கரேசன், போர்டிகோ, அலுவலக வாயில் ரெட் கார்பெட், பூ டெக்கரேஷன், எல்.இ.டி திரை ஆடியோ சிஸ்டம், சீரியல் செட், போக்கஸ் லைட், ஜெனரேட்டர் ஆகியவைகளை வாடகை முறையில் ஏற்பாடு செய்யும் பணிக்கும் அதற்கான செலவினம் ரூ.9,90,000/–க்கு பொதுநிதியின் கீழ் உடனடியாக பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>S. No</th><th>Descrription</th><th>Karaikudi Blossom (Rs.)</th><th>குணா வாடகை பாத்திர நிலையம் (Rs.)</th><th>TRS Events (Rs.)</th></tr>
<tr><td>1</td><td>Iron Angle Tinsheet Pandal Arragement 200 x 30</td><td>283500</td><td>279450</td><td>264115</td></tr>
<tr><td>2</td><td>Pipeshamianaforreports</td><td>12700</td><td>13200</td><td>9100</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண். 93<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | Mayoroffice Flower Decoration | 49200 | 48500 | 41525 |
| 4 | Maamandrakoodam decoration | 61300 | 66400 | 55807 |
| 5 | Porticohall carpet, Flower Decoration | 27900 | 28300 | 23572 |
| 6 | Flower Bouquetarranggements | 175400 | 169900 | 110350 |
| 7 | Ledscreen T4 Places | 82500 | 86000 | 79600 |
| 8 | Micset/Audiosystems | 62400 | 64800 | 52800 |
| 9 | Serial Lights Decoration | 81100 | 83500 | 77350 |
| 10 | Halogen Lights with poles, Generator 125 Kv | 135500 | 143500 | 120900 |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் TRS Events நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்கலாம்.
2. அவசியம் அவசரம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள TRS Events நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4546/2024/இ1

3

காரைக்குடி மாநகராட்சிக்கு எதிராக காரைக்குடி தேவகோட்டை மற்றும் சிவகங்கை கிளை மாவட்ட நீதிமன்றங்களில் தொடரப்பட்ட கீழ்கண்ட வழக்குகளுக்கு நகராட்சி சார்பில் ஆஜராகி வரும் திரு.R.ராஜபாண்டியன், வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் கேட்டு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி உரிய தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வழக்கறிஞர் பெயர்கள் | வழக்கு எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.R.ராஜபாண்டியன், நகராட்சி வழக்கறிஞர் தேவகோட்டை. | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காரைக்குடி ஆறுமுகம் பிள்ளை என்பவர் | 7500/- |

**தீர்மான எண். 94**
பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.136/2023 | | | |
| | | 2 | | தேவகோட்டை நீதிமன்றம் எம்.ராஜேந்திரன் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.185/2020 | 7500/- | | |
| | | 3 | | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காரைக்குடி எம்.பெரியநாயகி என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.133/2023 | 7500/- | | |
| | | 4 | | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காரைக்குடி திருமதி.சித்ரா மற்றும் நான்கு நபர்கள் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.167/2023 | 7500/- | | |
| | | 5 | | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காரைக்குடி திருமதி.எஸ்.மாரியம்மாள் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.132/2023 | 7500/- | | |
| | | 6 | | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காரைக்குடி திருமதி.எம்.புனேஸ்வரி என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.135/2023 | 7500/- | | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>7</td><td></td><td>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காரைக்குடி திருமதி.எம்.சரோஜா என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.132/2023</td><td>7500/-</td></tr>
<tr><td>8</td><td></td><td>தேவகோட்டை நீதிமன்றம், சத்தியன் தியேட்டர் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.126/2022</td><td>7500/-</td></tr>
<tr><td colspan="3">மொத்தம்</td><td>60000</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு :<br>
மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>
ந.க.எண்.2467/2024/எப்2
</td>
<td></td>
</tr>
<tr>
<td>4</td>
<td>காரைக்குடி மாநகராட்சியில் 11.10.2024 அன்று ஒரே நாளில் குறிப்பிட்ட மணி நேரத்தில் 154 மி.மீ அளவிற்கு பெய்த கனமழை மற்றும் 12.10.2024 முதல் 14.10.2024 வரை தொடர் மழை காரணமாக பாதாள சாக்கடை இயந்திர குழியில் மண் மற்றும் கழிவுகளால் கழிவுநீர் வெளியேறி சாலையில் தேங்கியது. பாதாள சாக்கடை இயந்திர குழியில் உள்ள மண் மற்றும் கழிவுகளை அகற்றும் வாகனம் இம்மாநகராட்சியில் இல்லாத காரணத்தால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் இருந்து Desilt Vehicle வாகனம் மற்றும் ஓட்டுநரை அனுப்பி வைக்க திருச்சி மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள Desilt Vehicle TN45 CB 3123 வாகனத்தை 19.10.2024 முதல் 29.10.2024 வரை இம்மாநகராட்சியில் இயக்கப்பட்டது.<br>
மேற்படி, வாகனத்திற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான வாகன வாடகை கட்டண நிர்ணயம் மாவட்ட குழுவின் செயல்முறையின்படி, நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2600/– மற்றும் ஓட்டுநர் படி நாள் ஒன்றுக்கு ரூ.850/– ஆக மொத்தம் ரூ.3450/– செலுத்திடவும் வாகனத்திற்குண்டான எரிபொருளை காரைக்குடி மாநகராட்சியில் வழங்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் எண்.சிறப்பு/2024/இ3(மை), நாள்.18.10.2024–ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
அதன்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் Desilt Vehicle வாகனம் மற்றும் ஓட்டுநர் படி உட்பட நாள் ஒன்றுக்கு ரூ.3450/– வீதம் 11 நாட்களுக்கு (3450 x 11 = 37950/–) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு</td>
<td>தீர்மான எண். 95<br>
அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>செலுத்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1887/2024/இ1</td><td></td></tr>
<tr><td>5</td><td>காரைக்குடி பெருநகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டதன்படி முதல் மாமன்ற அறிமுக விழா 09.10.2024 அன்று மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. அதற்கான விளம்பரம் தினசரி நாளிதழில் வெளியிட்ட வகையில் கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br><table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>பட்டியல் எண்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>KAL PUBLICATION (P) LTD MADURAI தினகரன் நாளிதழ்</td><td>3300510108<br>Dt: 09.10.2024</td><td>30492</td></tr>
<tr><td>2.</td><td>THE DAILY THANTHI</td><td>2425MDU2107327<br>3</td><td>17955</td></tr>
<tr><td>3.</td><td>DINAMALAR, MADURAI</td><td>344/09.10.2024</td><td>19597</td></tr>
<tr><td>4.</td><td>EXPRESS PUBLICATION (MADURAI) PRIVATE LIMITED, MADURAI</td><td>TN/1387544<br>Dt:09.10.2024</td><td>16800</td></tr>
<tr><td>5.</td><td>இந்து தமிழ், காரைக்குடி</td><td>019 / Dt:08.10.2024</td><td>18900</td></tr>
<tr><td>6.</td><td>MALAI MURASU, MADURAI</td><td>AD24251033<br>Dt:09.10.2024</td><td>18900</td></tr>
<tr><td>7.</td><td>MALAR PUBLICATIONS LTD MALAI MURASU</td><td>MDU–D24100062<br>Dt:09.10.2024</td><td>14700</td></tr>
<tr><td>8.</td><td>தின கதிர், சென்னை</td><td>85/ Dt:08.10.2024</td><td>5000</td></tr>
<tr><td>9.</td><td>வணக்கம் தமிழகம், சென்னை</td><td>440/Dt:14.10.2024</td><td>5000</td></tr>
</table></td><td>தீர்மான எண். 96<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>10.</td><td>தினசங்கு, மதுரை</td><td>886/Dt:09.10.2024</td><td>7000</td></tr>
<tr><td>11.</td><td>நவ் இந்தியர் டைம்ஸ், சென்னை</td><td>164/ Dt:09.10.2024</td><td>5500</td></tr>
<tr><td>12.</td><td>KAL PUBLICATIONS 9P0 LTD, MALAI MURASU</td><td>330012606 Dt:09.10.2024</td><td>12600</td></tr>
<tr><td>13.</td><td>DINA CHEITHI, CHENNAI</td><td>NPADD-24-25 E-1300, Dt: 09.10.2024</td><td>8000</td></tr>
<tr><td>14.</td><td>மாலை தமிழகம், சென்னை</td><td>7587/24-25, Dt: 09.10.2024</td><td>6300</td></tr>
<tr><td>15.</td><td>தின சூரியன், தினசரி நாளிதழ், மதுரை</td><td>2051 Dt:09.10.2024</td><td>7350</td></tr>
<tr><td>16.</td><td>THINA BOOMI, MADURAI</td><td>131040 Dt:09.10.2024</td><td>8400</td></tr>
<tr><td>17</td><td>தினகாற்று, கடலூர்</td><td>KNMS000550 09/10/2024</td><td>5250</td></tr>
<tr><td>18</td><td>உரிமை குரல், மதுரை</td><td>413, 09.10.2024</td><td>6000</td></tr>
<tr><td colspan="3">மொத்தம்</td><td>213744</td></tr>
</table>
<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல்படி சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய தொகை விடுவிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<br>அலுவலகக்குறிப்பு-
<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
<br>2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
<br>ந.க.எண்.002173/2024/எப்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>சிவகங்கை மாவட்டம் மற்றும் காரைக்குடி மாநகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை நேராய்வு செய்யவும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடத்திடவும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் காரைக்குடி மாநகராட்சிக்கு 10.09.2024 அன்று வருகை தந்ததையொட்டி கீழ்வரும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி, விளம்பரம் நாளிதழ்களில் செய்யப்பட்டதற்கும் அதற்கான விளம்பரக்</td>
<td>தீர்மான எண். 97<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>கட்டணத்தை சம்பந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>நாளிதழ் பெயர்</th><th>விளம்பரக் கட்டணம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>தினமலர்</td><td>20412</td></tr>
<tr><td>2</td><td>தினந்தந்தி</td><td>35083</td></tr>
<tr><td>3</td><td>மாலைமலர்</td><td>12600</td></tr>
<tr><td>4</td><td>தினகரன்</td><td>77756</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று விளம்பரம் மேற்கொள்ளப்பட்டு விளம்பரக் கட்டணம் வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.192/2024/இ1</td><td></td></tr>
<tr><td>7</td><td>இம்மாநகராட்சியால் உள்ளாட்சி நிதி தணிக்கை மேற்கொள்ளப்பட்ட தணிக்கை பணிக்காக 2022–2023 ஆம் ஆண்டு தணிக்கை கட்டணம் ரூ.127236/– ஐ அரசு கணக்கில் செலுத்த தணிக்கை தடை பத்தி எண்.32–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அரசு கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு–<br>
1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்.9457/2022/அ3</td><td>தீர்மான எண். 98<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>8</td><td>காரைக்குடி மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்குட்பட்ட நகர்நல மையத்திற்கு தேவையான மரச்சாமான்கள் மற்றும் மருத்துவமனைக்குத் தேவையான இதரச்சாமான்கள் போன்ற பொருட்கள் வாங்குவதற்கு மாமன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 05.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>SVR Traders,<br>No.739/6, Mahalakshmi Nagar,<br>3rd street, 6th Cross street,</td><td>மதிப்பீட்டை விட 1.72 % குறைவு</td></tr>
</table></td><td>தீர்மான எண். 99<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>

| | | |
|---|---|---|
| | K.Puduer, Madurai. | |
| 2 | GV Agencies,<br>Lehora Arcade, F5, முதல்மாடி,<br>America College Opposite,<br>Madurai. | மதிப்பீட்டை விட 0.25 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் SVR Traders, மதுரை என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 1.75 % குறைவாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 3562/2024/H1
</td><td></td></tr>
<tr><td>9</td><td>

காரைக்குடி மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தூய்மைப்பணி மேற்கொள்ள தேவைப்படும் உபகரணங்களான கையுறை, ஒளிரூட்டும் சட்டை, கம்பூட், தலைக்கவசம், மழைகோட், முகக் கவசம் போன்ற உபகரணங்கள் வாங்குவதற்கு மாமன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 05.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1 | ரஜீ ஏஜென்ஸிஸ்,<br>எண்.89, கீழக்குடியிருப்பு,<br>ஜெயம்கொண்டம் | மதிப்பீட்டை விட 0.41 % குறைவு |
| 2 | ஸ்ரீ முருகன் எண்டர்பிரைசஸ்,<br>எண்.50D, சிதம்பரம் ரோடு,<br>ஜெயம்கொண்டம். | மதிப்பீட்டை விட 3.02 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ரஜீ ஏஜென்ஸிஸ், ஜெயம்கொண்டம் என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.41% குறைவாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td><td>

**தீர்மான எண்.** 100<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது
</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 3562/2024/H1</td><td></td></tr>
<tr><td>10</td><td>காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரவியாபாரிகளில் PMSVANidhi திட்டத்தின் கீழ் ரூ.10,000/- வங்கி கடன் பெற்றுள்ள சாலையோர வியாபாரிகளின் சமூக பொருளாதார விபரங்களை Se-Samriddhi (phase-5) திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் சிறப்பு முகாம் நடத்தும் பணி மேற்கொண்டு வரப்பெறும் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய கீழ்காணும் மூன்று தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு.<br><br><table><tr><th>வ.எண்</th><th>நிறுவனங்களின் பெயர்</th><th>விலைப்புள்ளி</th></tr><tr><td>1</td><td>VISA VENTURE</td><td>ஒரு நபருக்கு கணக்கெடுப்பு செய்ய ரூ.100 + 18% வரி</td></tr><tr><td>2</td><td>E-data Pro</td><td>ஒரு நபருக்கு கணக்கெடுப்பு செய்ய ரூ.180 + 18% வரி</td></tr><tr><td>3</td><td>Bharathi HR Consultancy</td><td>ஒரு நபருக்கு கணக்கெடுப்பு செய்ய ரூ.150 + 18% வரி</td></tr></table><br>மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் VISA VENTURE என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே, மேற்கண்ட VISA VENTURE என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு-**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.1905/2021/எப்2</td><td>**தீர்மான எண். 101**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>11</td><td>காரைக்குடி மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இம்மாநகரட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்டிக்கிடக்கும் புல், செடி, கொடிகளை வெட்டி அப்புறப்பப்படுத்த புல்வெட்டும் இயந்திரம் (Brush Cutter) உபகரணம்</td><td>**தீர்மான எண். 102**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>வாங்குவதற்கு மாமன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 05.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>ரஜீ ஏஜென்ஸிஸ்,<br>எண்.89, கீழக்குடியிருப்பு,<br>ஜெயம்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட 0.21% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ முருகன் எண்டர்பிரைசஸ்,<br>எண்.50D, சிதம்பரம் ரோடு,<br>ஜெயம்கொண்டம்.</td><td>மதிப்பீட்டை விட 1.02 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ரஜீ ஏஜென்ஸிஸ், ஜெயம்கொண்டம் என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.21% குறைவாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :<br>
1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண். 3562 /2024/H1</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>12</td>
<td>காரைக்குடி மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் சுகாதாரப் பணி மேற்கொள்ள சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர், வெள்ளை பினாயில், கருப்பு பினாயில் போன்ற சுகாதாரப் பொருட்கள் வாங்குவதற்கு மாமன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 05.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>ரஜீ ஏஜென்ஸிஸ்,<br>எண்.89, கீழக்குடியிருப்பு,<br>ஜெயம்கொண்டம்.</td><td>மதிப்பீட்டை விட 1.18% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ முருகன் எண்டர்பிரைசஸ்,<br>எண்.50D, சிதம்பரம் ரோடு,<br>ஜெயம்கொண்டம்.</td><td>மதிப்பீட்டை விட 1.12 % அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண். 103<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ரஜீ ஏஜென்ஸிஸ், ஜெயம்கொண்டம் என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 1.18% குறைவாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 3562/2024/H1 | |
| 13 | காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூராகவும், தொல்லையாகவும், போக்குவரத்திற்கு இடையூராகவும் பராரியாய் சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து மாநகராட்சிக்கு வெளியே கொண்டு சென்று விடுவதற்கு பன்றி பிடிப்பவர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 3561/2023/H1 | **தீர்மான எண். 104**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 14 | காரைக்குடி மாநகராட்சியில் 36 வார்டுகளிலும் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் தினசரி சந்தை, வாரச்சந்தை மற்றும் இதர பகுதிகளில் தினசரி சேகரமாகும் சுமார் 48 மெடன் குப்பைகளில் தூய்மைப் பணியாளாகளால் பிரித்து வாங்கப்படும் மக்கும் குப்பைகளில் நகராட்சிக்கு சொந்தமான 4 நுண் உரக்கிடங்குகள், வாரச்சந்தையில் இயங்கி வரும் உயிர் மீத்தேன் கூடம் செயல்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள மக்காத குப்பைகள் மற்றும் பிரித்து வாங்க முடியாத பகுதிகளில் சேகரமாகும் மொத்த குப்பைகள் (Mixed waste) ரஸ்தா உரக்கிடங்கிற்கு எடுத்துச்செல்லப்படுகிறது.<br><br>மேற்கண்டவாறு எடுத்துச்செல்லப்படும் குப்பைகள் கடந்த 26 மாதங்களாக R.M.Solution நிறுவனம் மூலம் நகராட்சிக்கு சொந்தமான MRF சென்டர் மூலம் செயலாக்கம் மேற்கொள்ளப்பட்டு மக்கும் குப்பைகள் வின்ட்ரோ கம்போஸ்ட் மூலம் உரமாக்கப்பட்டு உரம் விவசாயிகளுக்கு இலவசமாகவும் ரஸ்தா உரக்கிடங்கு தோட்ட பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. | **தீர்மான எண். 105**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
மக்காத குப்பைகள் RDF மற்றும் மக்காத குப்பைகளில் உள்ள துணிகள், ரப்பர் போன்ற பொருட்கள் Shredding Machine மூலம் துகள்களாக மாற்றப்பட்டும் சிமெண்ட் ஆலைக்கு எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இவ்வாறான செயல்பாட்டினால் ரஸ்தா உரக்கிடங்கில் சேகரமாகும் குப்பைகளின் அளவு கணிசமான அளவு குறைகிறது. மேலும், குப்பைகள் கொட்டப்பட்டு தேக்கமடையும் அளவு குறைவதால் நிலத்தடி நீர், நிலம் மாசடைவதும் குறைகிறது.
எனவே மேற்கண்ட RM Solution நிறுவன பணியின் காலம் 30.11.2024ல் முடிவடைவதால், மேற்கண்ட பணியினை மேலும் 2 மாதக்காலத்திற்கு தொடர அனுமதியும் (1.12.2024 முதல் 31.01.2025 வரை) ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.14.87 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :
<ol>
<li>மாமன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன்அனுமதிபெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>15</td>
<td>
காரைக்குடி மாநகராட்சியில் கீழ்வரும் அட்டவணையில் காணும் விவரங்களின்படி நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்து மூன்றாம் தரப்பு தரச்சான்றினை (Third party Inspection Report) முதல்வர் / துணைதலைவர் அமைப்பியல் துறை அண்ணா பொறியியல் கல்லூரி பட்டுக்கோட்டை அவர்கள் வழங்கவும் அதற்கான ஆய்வு கட்டணத்தை செலுத்துவதற்கு கேட்பு கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>ஆய்வு கட்டணம் ரூ</th></tr>
<tr><td colspan="3">கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் KNMT-2023-24</td></tr>
<tr><td>1</td><td>காரைக்குடி மாநகராட்சி கழனிவாசல் கோட்டையூர் ரோடு நாளங்காடி கட்டும்பணி Construction of New Daily Market at Ward no3 Survey No559 (Kalanivasal) in Karaikudi city Municipal Corporation</td><td>52000</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண். 106<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2 | காரைக்குடி மாநகராட்சி நகரளவை வார்டு எண்9 சர்வேஎண்10-27/1B பழைய பேருந்து நிலையத்தை புதுப்பித்தல் பணி<br>Renovation of Old Bus Srand at ward no9 Survey no10-27/ 1B in Karaikudi city Municipal Corporation | 10000 | | |
| | | நமக்கு நாமே திட்டம் 2022-23 | | | | |
| | | 3 | Construction of Badmiton court at Word no 18 Soodamanipuram in Karaikudi city Municipal Corporationy | 12000 | | |
| | | பொது நிதி - 2022-2023 | | | | |
| | | 4 | காரைக்குடி மாநகராட்சி அம்பேத்கார் சிலை அருகில் நகரளவை வார்டு 2 பிளாக்7 சர்வே எண்520/1,2,3 ல் 7 கடைகள் கட்டும் பணி<br>Construction of New Shop No-7 at Ward no3 Survey no 520/1.2.3 in Karaikudi city Municipal Corporation | 5000 | | |
| | | 5 | காரைக்குடி மாநகராட்சி ஆரியபவன் ஹோட்டல் எதிரில் நகரளவை வார்டு 2 பிளாக்25 சர்வே எண் 633,634,635 7கடைகள் கட்டும்பணி<br>Construction of New Shop No-7 at Ward no2 Survey no 633.634.635 in Karaikudi city Municipal Corporation | 5000 | | |
| | | 6 | காரைக்குடி மாநகராட்சி ஆரியபவன் ஹோட்டல் எதிரில் நகரளவை வார்டு 2 பிளாக்25 சர்வே எண் 633,634,635 8கடைகள் கட்டும்பணி<br>Construction of New Shop No-8 at Ward no2 Survey no 633.634.635 in Karaikudi city Municipal Corporation | 5000 | | |
| | | 7 | காரைக்குடி மாநகராட்சி தேவர்சிலை அருகில் வணிகவளாகம் கட்டும்பணி<br>Construction of shopping complex near Dever statue | 20000 | | |

<table>
<tr><td></td><td>

| | | |
|---|---|---|
| | Wardno 3 Block no28 Survey no 966 Karaikudi city Municipal Corporation | |
| | **மொத்தம்** | 109000 |

மேற்கண்டவாறு மூன்றாம் தரப்பு சான்று வழங்குவதற்குண்டான கட்டணம் ரூ.109000/-ஐ முதல்வர் / துணைதலைவர் அமைப்பியல் துறை அண்ணா பொறியியல் கல்லூரி பட்டுக்கோட்டை என்ற பெயருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதிபெற்று கட்டணம் செலுத்தியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4652/2021/இ1</td><td></td></tr>
<tr><td>16</td><td>காரைக்குடி மாநகராட்சி வார்டு எண்13 அருணா நகர் தாவிது பள்ளிவாசல் சாலையில் பழைய பாலங்கள் மழைநீர் வடிகால்கள் பழுதடைந்துள்ளதால் அதனை புதுப்பித்து தரும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.14.90 இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியின கீழ் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்192/2024/இ1-1</td><td>**தீர்மான எண். 107**<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>17</td><td>காரைக்குடி மாநகராட்சி குடிநீர் நிதி 2024-25 ன் கீழ் ரூ.8.60 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குடி மாநகராட்சி வார்டு எண்.3 கழனிவாசல் சாலை மற்றும் வார்டு எண்.31 கீழ ஊரணி மேல்கரையில் குடிநீர் குழாய் (DI PIPE) அமைத்தல் பணிக்கு மாமன்ற தீர்மான எண் 83 நாள் 10.10.2024-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 04.12.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்த சதவீதம்** |
|---|---|---|
| 1. | திரு.D.செந்தில்குமார், காரைக்குடி | மதிப்பீட்டைவிட(-) 0.08 % குறைவு |
| 2. | திரு.கே சுந்தரபாண்டியன், காரைக்குடி | மதிப்பீட்டைவிட (+)1.06 % அதிகம் |
</td><td>**தீர்மான எண். 108**<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.D.செந்தில்குமார், காரைக்குடி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (–)0.08% குறைவாக உள்ளது. எனவே,ஒப்பந்தப்புள்ளியினைஏற்றுக்கொள்ளமாமன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1984/2024/இ1 | |
| 18 | காரைக்குடி மாநகராட்சி குடிநீர் நிதி 2024–25ன் கீழ் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குடி மாநகராட்சி கல்லுக்கட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்தல் பணிக்கு மாமன்ற தீர்மான எண் 90 நாள் 10.10.2024–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 04.12.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு<br><br>**வ.எண்** — **ஒப்பந்ததாரர் பெயர்** — **ஒப்பந்த சதவீதம்**<br>1. — திரு.D.செந்தில்குமார், காரைக்குடி — மதிப்பீட்டைவிட (–) 0.03 % குறைவு<br>2. — திரு.கே சுந்தரபாண்டியன், காரைக்குடி — மதிப்பீட்டைவிட (+)1.06 % அதிகம்<br><br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.D.செந்தில்குமார், காரைக்குடி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (–)0.03% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1984/2024/இ1 | **தீர்மான எண்.** 109<br>அனுமதிக்கப்பட்டது |
| 19 | காரைக்குடி மாநகராட்சி குடிநீர் நிதி – 2024–25 ன் கீழ் ரூ.16.80 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குடி மாநகராட்சி மகர்நோன்பு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகம் கிழக்கு பகுதியில் சுற்றுச்சுவர் மற்றும் பேவர் பிளாக் தளம் அமைத்தல் பணிக்கு மாமன்ற தீர்மான எண் 89 நாள் 10.10.2024 –ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 04.12.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வறுமாறு. | **தீர்மான எண்.** 110<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு.D.செந்தில்குமார்,<br>காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட (–) 0.05 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.கே சுந்தரபாண்டியன்,<br>காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட (+)0.84 % அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.D.செந்தில்குமார், காரைக்குடி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (–)0.05% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 1984/2024/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>20</td>
<td>
காரைக்குடி மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் –2024–25 ன் கீழ் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் –26 பழைய அரசு மருத்துவமனை பின்புறம் நியாய விலை கடை கட்டிடம் கட்டுதல் பணிக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவரின் செயல்முறைகள் ந.க.டி.ஏ1/3116/2024 நாள்:26.10.2024–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 27.11.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வறுமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S Technical Engineering Construction, Karaikudi.</td><td>மதிப்பீட்டைவிட (–) 0.50% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/S Mallika & Co, Karaikudi.</td><td>மதிப்பீட்டைவிட (+)0.50 % அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Technical Engineering Construction, Kottaiyur. என்ற ஒப்பந்த நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (–) 0.50% குறைவாக உள்ளது ஏற்கலாம், மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>
அலுவலகக்குறிப்பு<br>
மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>
ந.க.எண். 3434/2024/இ1
</td>
<td>தீர்மான எண். 111<br>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 21 | இம்மாநகராட்சி பகுதியில் சிக்கன் குனியா மற்றும் மலேரியா போன்ற கொசுக்களின் மூலம் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்தவும் கொசு உற்பத்தியை தடுக்கவும் வீடுதோறும் டெங்கு தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ள DBC (Domestic Breeding Checker) பணியாளர்களை தனியார் நிறுவனத்திடம் வெளிக்கொணர்வு முறையில் பெற்று பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக தினசரி ஊதிய விகிதத்தின் படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உட்புற கொசு ஒழிப்பு பணியாளர்களான DBC (Domestic Breeding Checker) பணியாளர்களை நியமிக்க மூன்று மாதத்திற்கு ஒருமுறை அனுமதி பெற்று திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் மூலம் 80 DBC பணியாளர்கள் பெற்று பணிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்த ஒப்பந்தம் 15.01.2025–ல் முடிவடைவதால் புதிய டெண்டர் கோருவதற்கும் வேலை உத்தரவு வழங்கிய நாள் முதல் ஆறு மாத காலத்திற்கு செலவினத் தொகை ரூ.88.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4003/2023/H1 | **தீர்மான எண். 112**<br>அனுமதிக்கப்பட்டது |
| 22 | காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிரதான சாலைகளிலும், தெருக்களிலும் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாகவும் சுற்றித்திரியும் கால்நடைகளை விதிகளுக்குட்பட்டு பிடித்து கோசலையில் சேர்ப்பதற்காகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 3561/2023/H1 | **தீர்மான எண். 113**<br>அனுமதிக்கப்பட்டது |
| 23 | இம்மாநகராட்சிக்கு E–TDS Revised return Filling Contractors return filling E–TDS Revised Return Salary staffs return flling TDS Staff salary certification down loanding ஆகியவை தயார் செய்து கொடுத்தமைக்கு அதற்கான தொகை ரூ.29520/–ஐ Alayam Associates நிறுவனம் வழங்க கோரியுள்ளார்கள். மேற்படி, தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.6201/2024/பி1 | **தீர்மான எண். 114**<br>அனுமதிக்கப்பட்டது |
| 24 | காரைக்குடி மாநகராட்சியில் பணிகள் எடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.G.சாந்தி, என்பவர் முடிவுற்ற பணிகளுக்கு வைப்புத்தொகையினை திரும்ப வழங்குமாறு 03.09.2024–ம் அன்று விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணபத்தில் 2019–2020 மற்றும் 2020– 2021 ஆம் ஆண்டுக்கான திரும்ப வழங்கக் கூடிய வைப்புத்தொகை காலம் கடந்த வைப்புத்தொகையாக உள்ளது. எனவே, | **தீர்மான எண். 115**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>கீழ்கண்ட விவரப்படியான காலம் கடந்த வைப்புத்தொகையினை திருமதி.G.சாந்தி, ஒப்பந்ததாரருக்கு தணிக்கை தடை ஏதுமில்லை என்பதால் வழங்கலாம் என தொழில்நுட்ப அலுவலரால் உரிய சான்றொப்பம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, காலம் கடந்த வைப்புத்தொகை ரூ.5,66,257/-ஐ மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணி விபரம்</th><th>வைப்புத்தொகை பதிவேடு விபரம்</th><th>வைப்புத்தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>IUDM-2019-20 திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள்</td><td>2024-2025 வருவாய் நிதி நிலுவை பதிவேடு ப.எண்.08,வ.எண்.16 (2019-2020)</td><td>315160</td></tr>
<tr><td>2.</td><td>IUDM-2020-21 திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள்</td><td>2024-2025 வருவாய் நிதி நிலுவை பதிவேடு ப.எண்.35,வ.எண்.0010 (2020-2021)</td><td>133318</td></tr>
<tr><td>3.</td><td>IUDM-2020-21 திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள்</td><td>2024-2025 வருவாய் நிதி நிலுவை பதிவேடு ப.எண்.38,வ.எண்.0035 (2020-2021)</td><td>117779</td></tr>
<tr><td colspan="3">மொத்தம்</td><td>566257</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
மாமன்றம் அனுமதிக்கலாம், ந.க.எண்.955/2024/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>25</td>
<td>காரைக்குடி மாநகராட்சியில் பணிகள் எடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.G.சாந்தி, என்பவர் முடிவுற்ற பணிகளுக்கு வைப்புத்தொகையினை திரும்ப வழங்குமாறு 03.09.2024-ம் அன்று விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தில் 2018-2019 ஆண்டுக்கான திரும்ப வழங்கக் கூடிய வைப்புத்தொகை காலம் கடந்த வைப்புத்தொகையாக உள்ளது. எனவே, கீழ்கண்ட விவரப்படியான காலம் கடந்த வைப்புத்தொகையினை திருமதி.G.சாந்தி, ஒப்பந்ததாரருக்கு தணிக்கை தடை ஏதுமில்லை என்பதால் வழங்கலாம் என தொழில்நுட்ப அலுவலரால் உரிய சான்றொப்பம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, காலம் கடந்த வைப்புத்தொகை ரூ.3,26,000/-ஐ மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வழங்க</td>
<td>தீர்மான எண். 116<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணி விபரம்</th><th>வைப்புத்தொகை பதிவேடு விபரம்</th><th>வைப்புத் தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>IUDM–2018–19 திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள்</td><td>2024–2025 வருவாய் நிதி நிலுவை பதிவேடு ப.எண்.27,வ.எண்.14341 (2018–2019)</td><td>163000</td></tr>
<tr><td>2.</td><td>IUDM–2018–19 திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள்</td><td>2024–2025 வருவாய் நிதி நிலுவை பதிவேடு ப.எண்.01,வ.எண்.0808 (2018–2019)</td><td>163000</td></tr>
<tr><td colspan="3">மொத்தம்</td><td>326000</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.955/2024/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>26</td>
<td>
காரைக்குடி மாநகராட்சியில் "சம்பையூற்று" கரையில் அமைக்கப்பட்டுள்ள 13 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நகரில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 24 ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 12.03 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 94 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரின் (Sodium Hypo Chloride) மூலம் குளோரினேசன் செய்யப்படுகிறது. அளவுகோலின்படி, நாள் ஒன்றுக்கு 12.03 MLD குடிநீருக்கு 241 லிட்டர் திரவ குளோரின் சேர்த்து வழங்கும் பட்சத்தில், குடிநீர் விநியோகத்தின் கடைசி பகுதியில் (Tail End) 0.50–1.00 ppm குளோரின் அளவு கிடைக்கப்பெறும். இவ்வாறு தினசரி விநியோகம் செய்யப்படும் 12.03 MLD குடிநீருக்கு காலநிலைகளுக்கு ஏற்றவாறு தோராயமாக 310 லிட்டர் திரவ குளோரின் தேவைப்படுகிறது. அதன்படி இந்த நிதி ஆண்டிற்கான இரண்டு காலத்திற்கு தேவைப்படும் (பிப்ரவரி 2025 முதல் மார்ச் 2025 வரை) திரவ குளோரின் வாங்குவதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு :<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.153/2019/இ1
</td>
<td>தீர்மான எண். 117<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 27 | மாண்பை சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண்.W.P.No.17380/2017,313/2014 and W.P.No.24243/2017 நாள்.29.04.2024 வழக்கின்படியும், மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17380/2017/எச்1, நாள்.25.06.2024–கடிதத்தில் படியும், செப்டிக் டாங்க் கழிவுகள் மற்றும் கசடு மண் அகற்றும் போது உரிய இயந்திரங்களைக் கொண்டு அகற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, காரைக்குடி மாநகராட்சிக்கு கசடு மண் அகற்றும் இயந்திரம் வாங்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 118**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் காரைக்குடி மாநகராட்சிக்கு தரச் சான்றிதழ் பெறுதல் மற்றும் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநகராட்சியாக சான்றிதழ் பெறுவதற்காக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு செலவினம் ரூ.60168/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம், ந.க.எண். 6031/2024/H1 | **தீர்மான எண். 119**<br>அனுமதிக்கப்பட்டது |
| 29 | தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ன் பிரிவு 102, 103, மற்றும் 199–ன் படியும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் விதி 289, 290 மற்றும் 394(1)–ன் படியும் மாநகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட, உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார்போல் நிர்ணயம் செய்து உரிமத்தொகை வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்விதிகள் 2023–ல் வர்த்தக உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன்படி இம்மாநகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி 2025 – 2026 நிதியாண்டு முதல் உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் துணை விதிகள் 2024**<br>**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்குதல்**<br>வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் – (1) அட்டவணைகள் I, II மற்றும் III–ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் | **தீர்மான எண். 120**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி மாநகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், காரைக்குடி மாநகராட்சி மாமன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகைபத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்துவரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச் சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம்–17–ல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்கவேண்டும்.

அட்டவணையின் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18 –இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்கவேண்டும்.

| 36 | காரைக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தேவகோட்டை ரஸ்தா உரக்கிடங்கில் 5.00 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உயிரி எரிவாயு கலன் அமைத்திட ரூ.170.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டதில், 2023–2024ம் நிதியாண்டு தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) தலைப்பில் பார்வையில் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதப்படி, ரூ.58.00 இலட்சம் முழுமான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் தற்சமயம் ரூ.58.00 இலட்சத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி, உயிரி எரிவாயு கலனை இயக்க நிலைக்கு கொண்டு வர கூடுதல் பணிகள் மேற்கொள்ள ரூ.112.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பணிகள் மேற்கொள்ள ஆகும் நிதி ரூ.112.00 இலட்சத்தினை ஏதேனும் திட்ட நிதியில் முழுமான்யமாக ஒதுக்கீடு செய்து தர மாமன்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண். 127**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.380/2024/இ1 | |
| 37 | காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட செஞ்சை சி.எம்.சி சாலையில் செயல்பட்டு வரும் பொதுசுகாதாரப்பிரிவு VI அலுவலகக்கட்டிடம் தற்போது பெய்த கன மழையால் மேற்கூரை மேற்பரப்பில் உள்ள சுர்க்கி மற்றும் தட்டோடு சேதமடைந்துள்ளது. மேலும், பூச்சு, கதவு, சன்னல், தளம், கழிவறை, தண்ணீர் வசதி செய்ய வேண்டியுள்ளது. மேற்படி கட்டிடம் நாள்பட்டு உபயோகம் செய்யப்பட்டுள்ளதால் மின் வயரிங் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு பாதாளச்சாக்கடை இணைப்பு புதியதாக வழங்கவும் வர்ணம் பூசும் பணிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.7.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5464/2024/எச்1 | **தீர்மான எண். 128**<br>அனுமதிக்கப்பட்டது |
| 38 | காரைக்குடி மாநகராட்சி வார்டு எண்.15, செக்காலை சாலையில் உள்ள மாநகராட்சி ஆணையாளர் குடியிருப்பின் முன்புறம் கூடுதல் செட் வசதி, டைல்ஸ் வசதி, வாட்டர், கசிளாப்புக்கள், மின்வயரிங பணிகள் மற்றும் வர்ணம் பூசி பொதுமராமத்து செய்யும் பணிக்கும் அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.16.85 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மாமன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 129**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 39 | குடிநீர் பராமரிப்பு பணிக்கு தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை, அவர்களின் அனுமதி கிடைக்கும் வரை நகர் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க வேண்டியதை கருத்தில் கொண்டும், குடிநீர் அத்தியாவசிய பணியின் அவசியம் கருதியும், குடிநீர் பராமரிப்பு பணியினை மாமன்றத்தீர்மான எண் 70, நாள் 10.10.2024ன்படி 01.08.2024 முதல் 31.10.2024 வரை மூன்று மாதங்களுக்கு 2021ம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்ட விலைவிகிதத்தில் மாதாந்திர ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் கால நீடிப்பும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.24.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.<br>மேற்படி குடிநீர் பராமரிப்பு பணிக்கு தற்போது 2024–2025ம் ஆண்டிற்கான பொதுபணித்துறை விலைவிகிதத்தின்படி ர.192.00 இலட்சத்திற்கு விரிவான திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக | **தீர்மான எண். 130**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு 23.10.2024ல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் இம்மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் மற்றும பராமரிப்பு பணியை தனியார் மூலம் மேற்கொள்ள புதிதாக நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று நடப்பாண்டு பொதுபணித்துறை விலை விகிதத்தின்படி புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளும் வரை இம்மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் சீராக விநியோகம் மற்றும் பராமரிப்பு பணியினை 01.11.2024 முதல் 31.12.2024 வரை இரண்டு மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00 இலட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே உள்ள விலை விகிதத்தின்படி தற்பொழுது பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மாமன்றம் அனுமதிக்கலாம் | |
| 40 | காரைக்குடி மாநகராட்சியின் 36 வார்டு பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் சேகரமாகும் திடக்கழிவுகளில் மக்கும் குப்பை மற்றும் மறுசுழற்சி செய்ய கூடிய பொருட்கள் போக மறுசுழற்சி செய்ய இயலாத எரியும் தன்மையுடைய குப்பைகள் (RDF Material ) Extended Producer Responsibility (EPR) படி நிறுவனங்கள் மூலம் சிமெண்ட் ஆலைக்கு எடுத்து செல்லப்பட்டது. நிர்வாக சூழலின் காரணமாக மேற்கண்ட மட்காத பொருட்கள் எடுத்து செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. ஆகையால் இந்நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவிலிருந்து பிரித்து சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் மற்றும் இதர எரியும் தன்மையுடைய RDF Material–களை சிமெண்ட் ஆலைக்கு ஒப்படைக்கும் பணியை DM Solutions நிறுவனம் மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.5073/2021/எச்1 நாள்.23.07.2024–ல் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.<br>மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் மற்றும் எளிதில் எரியக்கூடிய கழிவுகள் (RDF Material) தினசரி 15 M.T அளவிற்கு சேகரிக்கப்பட்டு வருகிறது. ஆகையால் மேலும் 750 M.T அளவிற்கு RDF Material–களை சிமெண்ட் ஆலைக்கு அனுப்பும் பணியை தற்போது பணி பார்த்து வரும் DM.Solutions நிறுவனம் முன்னர் அளித்த விலை விகிதத்திலேயே (ரூ.1320 per 1 M.T) தொடர்ந்து மேற்கொள்வதற்கும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.0573/2021/H1 | **தீர்மான எண். 131**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>41</td><td>காரைக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தேவகோட்டை சாலையில், இயங்கி வரும் உரக்கிடங்கு வளாகத்தில் கீழ்காணும் அடிப்படை வசதிகள் இல்லாததால், கால்நடைகள் வளாகத்திற்குள் செல்கிறது. உரம் தயாரிப்பு பணியில் மக்காத குப்பைகளை பிரித்து வைப்பதற்கு ப்ளாட்பார்ம் வசதி இல்லை. எனவே மழைக்காலங்களில் பிளாஸ்டிக் பொருட்களை (DRY–WASTE) பிரித்து மறு சுழற்சிக்கு அனுப்ப இயலவில்லை.<br>பணிகளின் விபரம் பின்வருமாறு<br><table><tr><th>வ. எண்</th><th>பணி விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr><tr><td>1</td><td>தேவகோட்டை ரஸ்தா உரக்கிடங்கு முன்புறம் வாகனங்கள் நுழையும் கேட்பகுதியில், கால்நடைகள் உட்புற வளாகத்திற்கு செல்லாத வகையில் தடுப்புகள் அமைப்பு (CATTLE CATTLER) ஏற்படுத்துதல், உட்புற சிமெண்ட் சாலையில் வளாக மழைநீர் வெளியேறிட ஆர்.சி.சி குழாய்கள் அமைத்தல் மற்றும் சேதமடைந்த சுற்றுச்சுவற்றினை கட்டுதல் பணி</td><td>3.30</td></tr><tr><td>2</td><td>தேவகோட்டை ரஸ்தா, உரக்கிடங்கு வளாகத்தில் (DRY WASTE) பிளாஸ்டிக் சேகரம் செய்திடும் மையம் கீழ்தள பகுதி மண்தளமாக இருப்பதால், வடிகால் வசதியுடன் சிமெண்ட் தளம் அமைத்தல் மற்றும் எடைமேடை பழுது நீக்கம் செய்தல்</td><td>16.00</td></tr></table>மேற்காணும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு –<br>மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்4936/2024/இ1</td><td>தீர்மான எண். 132<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>42</td><td>காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34, பாப்பா ஊரணி மேற்கு கரையில் ஏற்கனவே, உள்ள அங்கன்வாடி மையத்தினை பொது மராமத்து செய்து மெட்டல் மேற்கூரை அமைத்திட இந்நகர் மன்ற தீர்மானம் எண்.594, நாள்.11.07.2024–ல் ரூ.6.20 இலட்சத்திற்கும் மற்றும் 246 நாள்.02.08.2023–ல் ரூ.3.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.9.80 இலட்சத்திற்க்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்கனவே, இயங்கி வந்த அங்கன்வாடி மையக் கட்டிடம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டிடம் என்பதாலும், ஊரணியின் மேற்கு கரைப்பகுதியிலேயே அமைந்துள்ளதாலும், பணி துவங்கும்பொழுது பொதுமக்களால் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டு பணி</td><td>தீர்மான எண். 133<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>நிறுத்தப்பட்டது. தற்சமயம், பாப்பா ஊரணி வடக்குப் பக்கம் ஊரணியில் இருந்து சுமார் 40 தூரத்தில் அமைந்துள்ள காலியிடத்தில் புதிதாக அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டிடவும், அதற்கான மதிப்பீடு ரூ.15,60,000/–இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. அங்கன்வாடி புதிய கட்டிடம் கட்டிட கல்வி நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்துக்கொள்ளலாம்.<br>2. நகர்மன்ற தீர்மானம் எண்.246, நாள்.02.08.2023 மற்றும் 594 நாள்.11.07.2024 ஆகிய தீர்மானங்களை ரத்து செய்து கொள்ளலாம்.<br>அலுவலகக் குறிப்பு :<br>மாமன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.1984/2024/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>43</td>
<td>காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சொந்தமான பெரியார் சிலையிலிருந்து இரயில்வே நிலையம் சந்திப்பு சாலையில், காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சிவகங்கை தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படி இருபுறமும், மழைநீர் வடிகால் அமைத்து நான்கு வழிச்சாலையாக மாற்றித்தருமாறும் அதனை நெடுஞ்சாலைத்துறை மூலம் பணிகள் மேற்கொள்ள கோட்டப்பொறியாளர்(நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு சிவகங்கை அவர்கள் கடிதம் எண் 2000/2024/உ.பொ காரைக்குடி/ நாள் 10.12.2024–ன்படி தடையில்லா சான்று கோரி வரப்பெற்றுள்ள கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. சாலையின் விபரம் பின்வருமாறு
<table>
<tr><td>1.</td><td>பெரியார் சிலை முதல் தேவர் சிலை வரை 100 அடி பிரதான சாலை (I$^{st}$ reach)</td><td>775.00 மீ</td></tr>
<tr><td>2.</td><td>தேவர் சிலை முதல் இரயில்வே நிலைய சந்திப்பு சாலை வரை 120 அடி பிரதான சாலை (II$^{nd}$ reach)</td><td>1400.00 மீ</td></tr>
<tr><td>3.</td><td>முடியரசன் சாலை (அம்மா உணவகம் முதல் காவேரி மருத்துவமனை வரை) (III$^{rd}$ reach)</td><td>1000.00 மீ</td></tr>
</table>
மேற்காணும் சாலைகள், மாநகரின் பிரதான சாலையாகவும், பேருந்துகள் போக்குவரத்து நடைபெற்று வரும் சாலையாகவும், சாலையின் இருபுறமும் வணிக வளாகங்கள் பொதுமக்கள் போக்குவரத்து மிகுந்த சாலையாக இருப்பதால் கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு நான்கு வழிச்சாலை பணிகள் மேற்கொள்ள தடையில்லா சான்று வழங்க மாமமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்ப்படுகிறது மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>சிறப்பு நிபந்தனைகள்<br>1. நான்கு வழிச்சாலையாகவும், இருபுறமும் ஆர்.சி.சி சிலாப் மூடி கொண்ட மழைநீர் வடிகால் மூடியுடன் அமைக்கப்பட வேண்டும்<br>2. இருபுறமும், கிரில் வசதியுடன் கூடிய நடைமேடை, சென்டர் மீடியன் அமைத்து, அலங்கார</td>
<td>தீர்மான எண். 134<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | செடிகள் அமைத்து, அலங்கார மின்விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்.<br>3. குடிநீர் பகிர்மான குழாய், தொலைதொடர்பு கேபிள்கள் செல்ல தனியாக "DULT" வசதி செய்து தர வேண்டும்<br>4. பாதாள சாக்கடை திட்ட இயந்திர குழிகள் மற்றும் கழிவுநீர் குழாய் செல்லும் சாலையின் இருபகுதியிலும், பேவர்பிளாக் தளம் அமைக்கப்பட வேண்டும்.<br>5. மழைநீர் எளிதில் வழிந்தோடிடும் வகையில், தார்சாலை வசதி மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.<br>6. ஒளிரும் பெயர் பலகைகள் நிறுவப்படவேண்டும். சாலையோரத்தில் இரண்டு சக்கர, இருசக்கர வாகனங்கள் பார்க்கிங் வசதி செய்யப்பட வேண்டும்.<br>7. மேற்காணும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டபின் மாநகராட்சி வசம் திரும்பவும் ஒப்படைக்கப்பட வேண்டும்.<br>மேற்காணும் நிபந்தனைகளை நெடுஞ்சாலைத்துறை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் கடிதம் வழங்கும் பட்சத்தில் நான்கு வழிச்சாலையாக பணிகள் மேற்கொள்ள பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதியும், மாநகரின் தோற்றம் மேலும் அழகுபடுத்தப்படுவதால் தடையில்லா சான்றிதழ் வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம் | |
| 44 | காரைக்குடி மாநகராட்சி சர்வே வார்டு எண் 2, நகரளவை எண் 589, கழனிவாசல் கோட்டையூர் ரோடு வியாழக்கிழமை வாரச்சந்தை வளாகத்திற்குள் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் ரூ.619.00 இலட்சம் மதிப்பீட்டில் தினசரி நாளங்காடி கடைகள் கட்டப்பட்டு வருகிறது. மேற்காணும் கடை கட்டிட பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதால் பொதுப்பணித்துறை மற்றும் அரசு வழிகாட்டி மதிப்பின்படி 88 கடைகளுக்கு மாத வாடகை நிர்ணயம் செய்து ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மற்றும் இதர செலவினத்திற்கு ஆகும் உத்தேச தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவரச அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை எடுத்ததை மாமன்றம் அங்கீகரிக்கலாம் . ந.க.எண்.2039/2024/அ1 | **தீர்மான எண். 135**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 45 | காரைக்குடி மாநகராட்சி வருவாய் நிதி – 2024–25 ன் கீழ் ரூ. 12.85 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குடி மாநகராட்சி கணேசபுரம் பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையில் உள்ள பழுதுகளை சரிசெய்து | **தீர்மான எண். 136**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு மாமன்ற தீர்மான எண் 81 நாள் 10.10.2024 –ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 27.11..2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S Shiva Vishnu Services, Chennai</td><td>மதிப்பீட்டைவிட (–)0.10 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/S SGS Services, Chennai.</td><td>மதிப்பீட்டைவிட (+) 0.29 % அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Shiva Vishnu Services, Chennai என்ற ஒப்பந்த நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (–) 0.10% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 3434/2024/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>46</td>
<td>காரைக்குடி மாநகராட்சி வருவாய் நிதி – 2024–25–ன் கீழ் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குடி மாநகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு அணைத்து பிரிவுகளுக்கும் கணினிகள், பிரிண்டர்கள் ,மற்றும் ஜெராக்ஸ் மிஷின்கள் கொள்முதல் செய்து நெட்ஒர்க் இணைப்பு வழங்குதல் பணிக்கு மாமன்ற தீர்மான எண்.66 நாள்.10.10.2024 –ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 26.11..2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வறுமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S அருள் கம்ப்யூட்டர்ஸ் , காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட (–) 0.01 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.கே சுந்தரபாண்டியன், காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட (+)0.45 % அதிகம்</td></tr>
</table></td>
<td>தீர்மான எண். 137<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S அருள் கம்ப்யூட்டர்ஸ், காரைக்குடி என்ற ஒப்பந்த நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (–) 0.01% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மா மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| 47 | காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமீபத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழை–2024னால் வார்டு எண் 2,6,8,17,19 22,25,26 மற்றும் 27 வார்டுகளில் அமைந்துள்ள சாலைகளில் பள்ளங்கள் ஏற்பட்டு பொதுமக்களின் நடமாட்டத்திற்கும், இருசக்கர வாகனங்கள் ,போக்குவரத்திற்கும் இடையூறாக இருந்து வருகிறன்றது. மேலும் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுசுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது.எனவே பொதுமக்களின் சுகாதார நலன் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்படி வார்டுகளில் உள்ள சேதடைந்த சாலைகளில் WMM Patchwork பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ14.00 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.** 138<br>அனுமதிக்கப்பட்டது |
| 48 | காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமீபத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழை–2024னால் வார்டு எண் 28,29,31,33,34 மற்றும் 35 வார்டுகளில் அமைந்துள்ள சாலைகளில் பள்ளங்கள் ஏற்பட்டு பொதுமக்களின் நடமாட்டத்திற்கும், இருசக்கர வாகனங்கள் ,போக்குவரத்திற்கும் இடையூறாக இருந்து வருகிறன்றது. மேலும் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுசுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது.எனவே பொதுமக்களின் சுகாதார நலன் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்படி வார்டுகளில் உள்ள சேதடைந்த சாலைகளில் WMM Patchwork பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ14.00 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.** 139<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>49</td>
<td>இந்நகராட்சி பகுதியில் சிக்கன் குனியா, டெங்கு மற்றும் மலேரியா போன்ற கொசுக்களின் மூலம் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்தவும் கொசு உற்பத்தியை தடுக்கவும் வீடுதோறும் டெங்கு தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளவும் 80 DBC (Domestic Breeding Checker) பணியாளர்களை திரு.D.செந்தில்குமார் ஒப்பந்தகாரர் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பெற்று பணியாற்றி வருகின்றனர். மேற்காணும் ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு 15.01.2025–ல் முடிவடைவதால் நோய்த்தடுப்பு நடவடிக்கையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் ஒப்பந்தத்தை 16.01.2025–முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத் தொகை ரூ.14.61 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>மாமன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.6366/2024/எச்1)</td>
<td>தீர்மான எண். 140<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>50</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்29916/2024/WB நாள்22.11.2024 ந்தேதிய கடிதத்தில் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு காலநிலை பின்னடைவு நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் மாநகர கால நிலை செயல் திட்டத்தின் City Climate Action Plan ( CCAP) மாநகராட்சி பகுதிகளில் உள்ள 50 சதவிகிதம் பெண்கள் பிரதிநிதிகள் கொண்ட 12 குழு உறுப்பினர்களை தேர்வு செய்யுமாறும் மேற்படி குழுவில் 1) வணக்கத்திற்குரிய மேயர்,2) மாநராட்சி ஆணையாளர் ,3) மாநகரப்பொறியாளர், ஆண் மாமன்ற உறுப்பினர் –1 , பெண் மாமன்ற உறுப்பினர் –4 , தன்னார்வு தொண்டு நிறுவனம்– 2, குடியிருப்போர் நலச்சங்கம்–2 ஆகியோரைக் கொண்ட 12 பேர் அடங்கிய குழுவை நியமித்து மாமன்றத்தில் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதற்கிணங்க, கீழ்கண்டுள்ளவாறு மாநகர கால நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்களை தேர்வு செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>குழு மாமன்ற உறுப்பினர்கள் பெயர் திரு/திருமதி /முகவரி</th><th>பதவி</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.முத்துத்துரை<br>வார்டு எண்–15</td><td>மாண்புமிகு மேயர்</td></tr>
<tr><td>2</td><td>எஸ்.சித்ரா</td><td>மாநகர ஆணையாளர்</td></tr>
<tr><td>3</td><td>ஆ.இசக்கி</td><td>மாநகரப்பொறியாளர்</td></tr>
<tr><td>4</td><td>சொ..கண்ணன்</td><td>8–வது வார்டு மாமன்ற உறுப்பினர்</td></tr>
<tr><td>5</td><td>இ. தெய்வானை</td><td>4–வது வார்டு மாமன்ற உறுப்பினர்</td></tr>
<tr><td>6</td><td>கா. கலா</td><td>9–வது வார்டு மாமன்ற உறுப்பினர்</td></tr>
</table></td>
<td>தீர்மான எண். 141<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>7</td><td>சை. ராணி ஜெய்த்துன்</td><td>21–வது வார்டு மாமன்ற உறுப்பினர்</td></tr>
<tr><td>8</td><td>சி.தனம்</td><td>36–வது மாமன்ற உறுப்பினர்</td></tr>
<tr><td>9</td><td>ஜி,முத்துக்குமார்<br>3A அம்பாள் புரம் முதல் வீதி<br>காரைக்குடி. 9842480118</td><td>ரோட்டரி பியர்ல் சங்கமம் துணை ஆளுநர்</td></tr>
<tr><td>10</td><td>பி.எல்.பாண்டியன்<br>கதவு எண்154 தாமரை வீதி சூடாமணிபுரம், காரைக்குடி</td><td>தன்னார்வு தொண்டு நிறுவனம் காரைக்குடி</td></tr>
<tr><td>11</td><td>திரு. கண்ணப்பன்<br>54 பாரதியார் தெரு, திலகர் நகர் காரைக்குடி–2, 9442984800</td><td>குடியிருப்போர் நல சங்கம்</td></tr>
<tr><td>12</td><td>திரு.எஸ்.கருப்பையா<br>3 ஜீவா நகர், காரைக்குடி<br>944109000</td><td>குடியிருப்போர் நல சங்கம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு :<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண் 5635/2024/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>51</td>
<td>காரைக்குடி மாநகராட்சியில் 2024–25ம் நிதியாண்டில் நடைபெற்ற மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகள், வளர்ச்சி பணிகள்,தொழில்மலர், விழா சிறப்புமலர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரங்கள் ஆகியவைற்றை தினசரி நாளிதழ்களில் அவ்வப்போது விளம்பரங்கள் செய்வதற்கான விளம்பரகட்டணங்களை சம்பந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்கவும் அதற்கான கூடுதல் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு.<br>
அனுமதிக்கலாம்.<br>
ந.களண்192/2024/இ1–1</td>
<td>தீர்மான எண். 142<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>52</td>
<td>மாநகராட்சி பகுதிகளில் இயங்கி வரும் அரசு பள்ளிகள் மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களின் பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்கு பொறுப்புகள் வழங்கி உத்தரவிடப்பட்டு இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அரசாணை எண்.166, நாள் 23.11.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில்</td>
<td>தீர்மான எண். 143<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 18 அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் வளாகப்பகுதிகளை சுத்தம் செய்ய வெளிக்கொணர்வு முறையில் தனியார் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. (ந.க.எண்.4004/2024/எச்1 செயல்முறை உத்தரவு நாள்.18.07.2024) இவ்வுத்தரவின் காலம் 30.11.2024–இல் முடிவுடைவதால், மேலும், 2 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்வதற்கு இதற்கான தோராய செலவினம் ரூ.19.60 இலட்சம் மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.4004/2023/எச்1</td>
<td></td>
</tr>
<tr>
<td>53</td>
<td>காரைக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் வெளிகொணர்வு முகமையில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் 07.12.2024 தேதியன்று சிறப்பு மருத்துவ முகாம் நடத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2976/2021/எச்1, நாள்.03.12.2024 தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மருத்துவ முகாம் நடத்துவதற்கான சாமியான பந்தல் அமைத்தல், இருக்கைகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.25000/–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.6081/2024/H1)</td>
<td>தீர்மான எண்.<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>54</td>
<td>காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் அட்டவணையில் கண்டுள்ள வார்டுகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் போன்ற பணிகள் மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்ட பணிகள் பின்வருமாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>வார்டு எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>25</td><td>வார்டு எண்.25, குறிச்சி கண்மாய் மேல்புறம் சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி</td><td>8.60</td></tr>
<tr><td>2</td><td>29</td><td>வார்டு எண்.29&33, வெங்கடாசலம் செட்டியார்</td><td>13.00</td></tr>
</table></td>
<td>தீர்மான எண். 145<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>குறுக்கு தெரு மற்றும் தெய்வராயன் தெரு குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி</td><td></td></tr>
<tr><td>3</td><td>32</td><td>வார்டு எண்.32, APVL குறுக்கு தெரு (புளியமரத்தடி வீதி) மழைநீர் வடிகால் அமைத்தல் பணி</td><td>9.00</td></tr>
<tr><td>4</td><td>35</td><td>வார்டு எண்.35, நாச்சுழியேந்தல் வடக்கு தெற்கு வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி</td><td>8.50</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>39.10</td></tr>
</table>
மேற்கண்ட பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு –<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.6379/2024/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>55</td>
<td>
காரைக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான கழனிவாசல் தினசரி சந்தை பின்புறம் உள்ள மின்மயானம் ரூ.145.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கீழ்கண்ட பணிகள் மேற்படி மதிப்பீட்டில் வழிவகை செய்யவில்லை என்பதால் மின்மயானத்திற்கு தேவையான கீழ்கண்ட தளவாடச்சாமன்கள் மற்றும் ஜெனரேட்டர் 20 KVA கூடுதலாக சாதனங்கள் வாங்கவும், அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.53 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>Office Table</td><td>1 எண்ணிக்கை</td></tr>
<tr><td>2.</td><td>Stainless Steel Structure</td><td>1 எண்ணிக்கை</td></tr>
<tr><td>3.</td><td>Movable Table</td><td>1 எண்ணிக்கை</td></tr>
<tr><td>4.</td><td>Plastic Chair</td><td>5 எண்ணிக்கை</td></tr>
<tr><td>5.</td><td>சின்டெக்ஸ் 1000 லிட்டர்</td><td>2 எண்ணிக்கை</td></tr>
<tr><td>6.</td><td>Gas Cylinder 19 kgs (Commercial 19kg)</td><td>1 எண்ணிக்கை</td></tr>
<tr><td>7.</td><td>இரும்பு கதவு 5.50 அடி உயரம்</td><td>1 எண்ணிக்கை</td></tr>
<tr><td>8.</td><td>தண்ணீர்வசதி உதிரி சாமான்கள் & UPVC Pipe</td><td>90 m</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். /2024/இ1
</td>
<td>தீர்மான எண். 146<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 56 | காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மூலம் மேற்கொள்ளப்பட்டு 27.05.2023 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் 146.75 கி.மீ நீளத்திற்கு பாதாளச் சாக்கடை குழாய்கள், 5728 இயந்திரகுழிகள், 16.00MLD சுத்திகரிப்பு நிலையம் ஆகியவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேவகோட்டை சாலையில் அமைந்துள்ள 16.00MLD சுத்திகரிப்பு நிலையத்தில் SCREEN WELL, GRIT WELL & SUCTION WELL தவிர மீதமுள்ள அனைத்தும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஐந்து ஆண்டு கால பராமரிப்பில் இருந்து வருகின்றது.<br>இந்நிலையில் காரைக்குடி மாநகராட்சியால் SUIDF TUFIDCO கடன் திட்டத்தில் 7250 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கழிவு நீர் குழாய்கள் மற்றும் இயந்திர குழிகள் ஆகியவற்றில் குறைபாடுகள் கண்டறியப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிவர்த்தி செய்து தருமாறு பலமுறை கடிதங்கள் அளிக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒருசில குறைபாடுகள் தவிர மற்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரப்படவில்லை. இது சம்பந்தமாக மாநகராட்சி நிர்வாகம் இத்திட்டத்தை பராமரிப்பு பணிகளுக்காக ஏற்றுக் கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. இந்த விவரத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.<br>இந்நிலையில் கடந்த 11.10.2024 அன்று மாநகரில் 154 மி.மி மழைப்பொழிவு ஏற்பட்டு தொடர் மழையினால் பாதாளச் சாக்கடை இயந்திர குழிகள் அனைத்தும் நிரம்பி சுத்திகரிப்பு நிலையத்தில் SCREEN WELL முழுவதுமாக SILT மூடிவிட்டது. தற்போது வரை மழை காலத்தில் பாதாளச் சாக்கடைத்திட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இத்திட்டத்தினை ஏற்றுக் கொள்ளாத நிலையில் பொதுமக்களின் பொது சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு பாதாளச் சாக்கடை திட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் தவிர மீதமுள்ள அனைத்தும் மாநகராட்சி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.<br>எனவே, இத்திட்ட பராமரிப்பிற்கான நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி மாதம் ஒன்றுக்கு ரூ.13.87இலட்சம் செலவாகும். டிசம்பர் 2024 மாதம் முதல் மார்ச் 2025 முடிய நான்கு மாதத்திற்கான பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ள செலவு தொகை ரூ.64.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்,<br>ந.க.எண்.2870 /2024/இ1 | **தீர்மான எண். 147**<br>அனுமதிக்கப்பட்டது |

57 சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் செ.மு.ஆ.எண்W5 /959/2020 நாள் 28.11.2024 ந்தேதிய கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 6.12.2024 அன்று காலை 10.30 மணியளவில் **Manharari Nirvan diwas Day –Mechanization of manual scavenging scheme** என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதால் மேற்படி திட்டத்தின் தொடக்க விழா காரைக்குடி நகரில் உள்ள PLP மகாலில் 6.12.2024 அன்று விழா ஏற்பாடுகளை செய்ய பொறுப்பு அலுவலராக காரைக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களை நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி செயல்முறையில் விழா மண்டபம் , விழா மேடை அலங்காரம், VIP இருக்கைகள் ஏற்பாடு செய்தல், ஒலிபெருக்கி அமைத்தல் விழா போன்ற பணிகளை மேற்கொள்ள பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, மேற்படி பணிகளுக்கான செலவினத்தை காரைக்குடி மாநகராட்சி, தேவகோட்டை நகராட்சி சரிபாதியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மேற்படி பணிக்கான உத்தேசசெலவினம் ரூ.80,000/-க்கும் பணியின் அவசரம் அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் வாடகை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளிகள் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S. No | Descrription | *Karaikudi Blossom (Rs.)* | *குணா வாடகை பாத்திர நிலையம் (Rs.)* | *TRS Events (Rs.)* |
|---|---|---|---|---|
| 1 | Teapai With Frill – 6Nos. X 350.00 | 2400 | 2100.00 | 1,800 |
| 2 | Red Carpet– (Pathway) – 35x6=210Sq.Ft X 5.50 | 1260 | 1155.00 | 1050 |
| 3 | Red Carpet(Pathway) – 43x6=258Sq.Ft X 5.50 | 1548 | 1419.00 | 1290 |
| 4 | Stage Center Carpet – 63x27=1,701Sq.Ft X 5.50 | 10206 | 9355.50 | 8505 |
| 5 | Stage Center Carpet – 79x12=948Sq.Ft X 5.50 | 5688 | 5214.00 | 4740 |
| 6 | Stage Front Frill – 65 x 3 | 3000 | 3500.00 | 2800 |
| 7 | Backdrop With White Cloth Frill – 41x13 Right Side | 9000 | 9100.00 | 8500 |

**தீர்மான எண். 148**
அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>8</td><td>Backdrop With White Cloth Frill – 41x13 Left Side</td><td>9000</td><td>9100.00</td><td>8500</td></tr>
<tr><td>9</td><td>Chair – 200Nos. x 6.00</td><td>1200.00</td><td>1200.00</td><td>1000</td></tr>
<tr><td>10</td><td>Mic set & Audio System</td><td>27000</td><td>28500.00</td><td>25000</td></tr>
<tr><td></td><td>Stage Lighting</td><td>16500</td><td>17500.00</td><td>15000</td></tr>
<tr><td></td><td>TOTAL (Including GST 18%)</td><td>86802.00</td><td>88143.50</td><td>78185.00</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளித்தொகை ரூ.78185/- அளித்துள்ள TRS Events நிறுவனத்தின் விலைப்புள்ளியை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
அவசியம் அவசரம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள TRS Events நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்.4546/2024/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>58</td>
<td>காரைக்குடி மாநகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சகம், கோவில்பட்டி என்ற அரசு அங்கீகரித்த அச்சகத்தில் (THE THOOTHUKUDI DISTRICT HI.TECH PRINTING AND ALLIED SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD IND.No TUTI.5) அச்சடித்து வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.05 இலட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.0573/2021/H1)</td>
<td>தீர்மான எண். 149<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>59</td>
<td>காரைக்குடி மாநகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை குறித்தும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இம்மாநகராட்சியில் தற்போது பயன்பாட்டில் உள்ள 25 இலகுரக வாகனங்கள் (LCV) மற்றும் இரண்டு கனரக வாகனங்கள் என மொத்தம் 27 வாகனங்களில் ஒலிபெருக்கி வசதி ஏற்படுத்துவதற்கு மாமன்ற அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>
அலுவலகக்குறிப்பு :<br>
மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.0573/2021/H1)</td>
<td>தீர்மான எண். 150<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>60</td>
<td>காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்35ல் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்திற்கு அருகில் உள்ள பயன்படாத ஆழ்குழாய் கிணற்றினை Heavy Compressor கொண்டு சுத்தப்படுத்தி மோட்டார் பம்பு இறக்கி குடிநீர் வசதி மற்றும் அதற்கு மின்வசதிகள் ஏற்படுத்தவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.30 இலட்சதிதிற்கு குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு.<br>மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.களண்192/2024/இ1</td>
<td>தீர்மான எண். 151<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>61</td>
<td>காரைக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்வரும் அட்டவணையில் காணும் மாநகராட்சி பள்ளிக்கூடங்களில் ஸ்மார்ட் வகுப்பறைகள் (Smart Class Room) அமைப்பதற்கும், அதற்கான செலவினத்தை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>மாநகராட்சி பள்ளியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>காரைக்குடி மாநகராட்சி கழனிவாசல் நடுநிலைப் பள்ளியில் ஒரு வகுப்பறையை ஸ்மார்ட் வகுப்பறையாக (Smart Class Room) அமைக்கும் பணி</td><td>9.50</td></tr>
<tr><td>2</td><td>காரைக்குடி மாநகராட்சி கழனிவாசல் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்கள் தொடர்வு கொள்ளும் வசதிக்காக Digital Public Address Audio Video System சாதனங்கள் பொருத்தும் பணி</td><td>8.50</td></tr>
<tr><td>3</td><td>காரைக்குடி மாநகராட்சி ஆலங்குடியார் நடுநிலைப்பள்ளியில் ஒரு வகுப்பறையை ஸ்மார்ட் வகுப்பறையாக (Smart Class Room) அமைக்கும் பணி</td><td>9.50</td></tr>
<tr><td>4</td><td>காரைக்குடி மாநகராட்சி ஆலங்குடியார் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்கள் தொடர்வு கொள்ளும் வசதிக்காக Digital Public Address Audio Video System சாதனங்கள் பொருத்தும் பணி</td><td>9.00</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு :<br>மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2365/2024/இ1</td>
<td>தீர்மான எண். 152<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 62 | காரைக்குடி மாநகராட்சியின் நிர்வாகப்பிரிவு மற்றும் வருவாய் பிரிவுக்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகளை அரசு அங்கீகரித்த அச்சகமான தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் (THE THOOTHUKUDI DISTRICT HI.TECH PRINTING AND ALLIED SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD IND.No TUTI.5) பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 (ஐந்து இலட்சம்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 153**<br>அனுமதிக்கப்பட்டது |
| 63 | காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சாலைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக UTIS UNIQUE CODE –ன் 186 கி.மீ ஆகும். GEO Special Survey மூலம் சர்வே செய்யப்பட்ட பின்னர் 244 கி.மீ சாலைகள் உள்ளது. எனவே, கூடுதலாக உள்ள சாலைகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக UTIS–ல் பதிவேற்றம் செய்வதற்கு மாமன்ற அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்புவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –**<br>மாமன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 154**<br>அனுமதிக்கப்பட்டது |
| 64 | காரைக்குடி மாநகராட்சி தினசரி மார்க்கெட் KNMT 2023–2024 ஆம் ஆண்டு திட்டப்பணியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. கூடுதலாக தரைக்கடைகள், மின்சார வசதி, ஆர்ச் மற்றும் இதர வசதிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட ரூ.76.00 இலட்சம் மதிப்பீட்டுத்தொகைக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –**<br>மாமன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 155**<br>அனுமதிக்கப்பட்டது |

( ஒம்/.திரு.சே.முத்துத்துரை)
மேயர்

**//உண்மை நகல்//**

ஆணையாளர்,
காரைக்குடி மாநகராட்சி